10.09.2024
OS. No. 253/2022
**வா.சா.1 –** திரு.பாலசுப்ரமணியன் த/பெ. சங்கப்பிள்ளை

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :–**

நான் கிரைய ஒப்பந்தத்தை சபினா பேகத்துடன் பிறப்பித்து கொண்டேன். நான் கிரைய ஒப்பந்தம் தொடர்பாக யாரிடம் பேசி பணம் கொடுத்தேன் என்றால் சபினா பேகம், சம்சத் பேகம் மற்றும் சம்சுதின் ஆகியோரிடம் பேசி பணம் கொடுத்தேன். நான் எந்த தேதியில் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் 12.08.2021 அன்று ரூ.3,00,000/– கொடுத்தேன். பிறகு 12.11.2021 அன்று ரூ.8,25,000/– கொடுத்தேன். பிறகு 19.02.2022 அன்று பிரதிவாதிகள் மூவரும் வீட்டில் இருக்கும்போது ரூ.3,55,000/– கொடுத்தேன். கடைசியாக தொகை கொடுத்த தேதி சரியாக நினைவில்லை. நான் பணத்தை மூன்று பிரதிவாதிகளிடமும் சேர்ந்து தான் மொத்தமாக கொடுத்தேன். நான் சபினா பேகத்திடம் கொடுத்தேன். அவர் வாங்கி அவரது அம்மாவிடம் கொடுத்தார். அவரது அப்பாவும் சேர்ந்து பணத்தை வாங்கினார். 12.11.2021 அன்று ரூ.8,25,000/– கொடுத்ததற்கு எவ்வித ஆவணமும் எழுதி வாங்கவில்லை. அதே போல் ரூ.3,55,000/– கொடுத்ததற்கும் எவ்வித ஆவணமும் எழுதி வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வாதி தரப்பு சான்றாவணம் 3 ஆகிய 12.11.2021 தேதியிட்ட பைரவி அவர்களுக்கு சபினா பேகம் எழுதி கொடுத்த கிரைய சாசனத்தை எனது வழிகாட்டுதலின் பேரில் முடிக்கப்பட்டது என்றால் சரிதான். வாதி தரப்பு சான்றாவணம் 3 ஆகிய கிரைய சாசனத்தில் கிரைய தொகையாக எவ்வளவு முடிக்கப்பட்டது என்று எனக்கு நினைவில்லை. எனது கட்சிப்படி வாதி தரப்பு சான்றாவணம் 3 ஆகிய கிரைய சாசனத்தில் கண்ட கிரைய தொகையை தான் கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் அதையும் வேறு தொகையையும் கொடுத்தேன். என்னிடம் இருந்த வேறு தொகை எவ்வளவு என்றால் மொத்தமாக ரூ.8,25,000/– கொடுத்தேன். நான் ரூ.8,25,000/– கொடுத்ததாக கூறுவது பொய்யானது என்றும், அவ்வாறு கொடுத்திருந்தது உண்மையாக இருந்தால் என்னால் தொகையை அறுதியிட்டு கூறமுடியும் என்றால் சரியல்ல. நான் வாதி தரப்பு சான்றாவணம் 3 ஆகிய ஆவணம் மூலம் 10 சென்ட் நிலத்தை பைரவிக்கு கிரையம் கொடுத்தேன். நான் இரண்டாம் பிரதிவாதியுடன் 50 சென்டுக்கு கொஞ்சம் குறைவான நிலத்திற்கு கிரைய ஒப்பந்தம் போட்டேன். கிரைய ஒப்பந்தத்தில் எவ்வளவு இடத்திற்கு கிரைய

ஒப்பந்தம் போட்டேன் என்று என்னால் குறிப்பிட்டு கூற முடியாது. 50 சென்டுக்கு கொஞ்சம் குறைவான நிலமாகும். 12.11.2021 ல் வாதி தரப்பு சான்றாவணம் 3 ஆகிய ஆவணம் மூலம் 10 சென்ட் நிலம் மட்டும் பைரவிக்கு எழுதி கொடுத்ததற்கு என்ன காரணம் என்றால் எனது மகளின் திருமணமும், அவர்களின் மகளது திருமணமும், 4, 5 நாட்களுக்குள்ளாக அப்போது நடைபெற இருந்ததால் விற்பனை செய்து கொடுக்கப்பட்டது. கிரைய ஒப்பந்தத்தில் கண்ட மொத்த சொத்தையும் என்னால் கிரையம் முடிக்க இயலாத காரணத்தினால் குறிப்பிட்ட 10 செண்ட் நிலத்தை மட்டும் பைரவிக்கு விற்பனை செய்ய அறிவுறுத்தினேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்திற்குள்ளாக என்னால் கிரையத்தை முடிக்க இயலவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த பத்திரத்தில் கால நீட்டிப்பை செய்வதற்கான மேற்குறிப்பு 12.01.2022 அன்று செய்யப்பட்டது. அது பொங்கலுக்கு முன்பு ஏற்பட்டதாகும். அதை நான் தான் கைப்பட எழுதினேன். அதை துறையூரில் வழக்கறிஞர் முத்துகுமார் அலுவலகத்திற்கு பக்கத்தில் வைத்து எழுதினேன். அந்த அறையும் வழக்கறிஞர் முத்துகுமாரின் அறை ஆகும். வழக்கறிஞர் முன்னிலையில் எழுதப்படவில்லை. நாங்கள் பேசி எழுதி கொண்டோம். என்னிடம் காட்டப்படும் வாதி தரப்பு சான்றாவணம் 2 ஆகிய கிரைய உடன்படிக்கை பத்திரத்தின் முதல் தாளில் பின் பக்கத்தில்12.08.2021 என எழுதப்பட்டுள்ள எண்களில் வருடத்தை குறிக்கும் 2021 என்பதில் உள்ள மூன்றாவது எண் ஆகிய 2 பச்சை வண்ணமுடைய மை உள்ள பேனாவால் திருத்தம் செய்யப்பட்டு இருக்கிறது. அதில் இரண்டு இடங்களில் குறிப்பாக 3 வது வரியில் 12.01.22 என்று எழுதப்பட்டிருப்பதில் வருடத்தை குறிக்கும் 22 என்பதில் உள்ள இரண்டாவது எண் ஆகிய 2 ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மேற்குறிப்பில் எந்தெந்த தேதியில் எவ்வளவு கிரைய முன்தொகை கொடுக்கப்பட்டது என்று குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு குறிப்புகள் எதுவும் இல்லாததற்கான காரணம் நான் குறிப்பிடுவது போல் எந்த ஒரு தொகையும் செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த பத்திரத்தில் முதல் தாளில் பின் பக்கத்தில் உள்ள மேற்குறிப்பில் போடப்பட்டதாக சொல்லப்படும் கையொப்பம் சபினா பேகத்தின் கையொப்பம் கிடையாது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் 1 முதல் 3 பக்கங்களில் உள்ள சபினா பேகத்தின் கையொப்பமும் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் முதல் தாளில் பின் பக்கத்தில் உள்ள மேற்குறிப்பில் போடப்பட்டதாக சொல்லப்படும் கையொப்பம் சபினா பேகத்தின் கையொப்பமும் வேறுபாடாக இருக்கிறது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த பத்திரத்தின் கால அவகாசம் முடிந்துவிட்டதால் கால அவகாசத்தை நீட்டிப்பதற்காக முதல் பிரதிவாதி சபினா பேகத்தின் கையொப்பத்தை நான் மோசடியாக செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

VerdictumIn

இரண்டாம் ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

View copy